சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 12.01.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **112/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-8 |
| சாட்சியின் பெயர் | : | மைதிலி |
| கணவர் பெயர் | : | டாக்டர். சுரேஷ் |
| கிராமம் | : | தஞ்சாவூர் |
| தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| தொழில் | : | மருத்துவர் |
| வயது | : | 54 |

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு. G. சுப்பையன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். தற்போது நான் அரசு மருத்துவமனையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். நான் முன்னதாக தஞ்சை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் நுண்கதிர் பிரிவில் உதவி மருத்துவராக பணி புரிந்தபோது, கடந்த 24.10.2009 ம் தேதியன்று மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த

திருக்கண்ணமங்கை, தெற்கு தெருவை சேர்ந்த கண்ணையன் மகன் அ.சா.2 ராஜேந்திரன் என்பவருக்கு தலை மற்றும் முகம் ஆகிய பகுதிகளில் நுண்கதிர் படம் எடுக்க வேண்டுமென அப்போதைய மருத்துவர் பரிந்துரை செய்ததன் பேரில், நான் அவருக்கு தலை மற்றும் முகம் ஆகிய பகுதிகளுக்கு நுண்கதிர் படம் எடுத்தேன். அவருக்கு தலைப்பகுதியில் ஆக்சிபிடல் போன் (Occipital Bone ) உடைந்து காணப்பட்டது. நுண்கதிர்படம் எடுக்க நான் பரிந்துரை செய்த ஆவணம் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் கண்காணிப்பாளர் அவர்கள் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் எடுத்த நுண்கதிர் படத்தை போலீசார் விசாரணையில் கொடுத்தேனா என்றால்-இல்லை. தற்போது நீதிமன்றத்திற்கு எடுத்து வந்துள்ளேனா என்றால்-இல்லை. எலும்பு முறிவு என குறிப்பிட்டுள்ளேன். இருப்பினும் எத்தனை எலும்பு முறிவு என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால்-சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M Digitally signed by VADIVEL M Date: 2026.01.12 17:07:46 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.